இன்று உங்கள் அறிகுறிகளை ஆய்வு செய்வதற்காக உங்கள் மருத்துவர் அவசரமாக உங்களை மருத்துவமனைக்கு பரிந்துரைத்துள்ளார். இது அவசரம் ஆகையால், இரண்டு வாரங்களுக்குள் நீங்கள் மருத்துவமனையில் அப்பாயிந்மென்ட்டைப் பெறுவீர்கள். இது ஸ்பெஷலிஸ்ட் அல்லது டயக்னாஸ்டிக்ஸ் சோதனைக்கான கிளினிக் அப்பாயிந்மென்ட்டாக இருக்கலாம், எ.கா. கேமரா சோதனை.

உங்கள் அறிகுறிகள் புற்றுநோய்க்கான வாய்ப்பு உட்பட, பல பொதுவான தொடர்புடைய நிலைகளைக் கொண்டுள்ளன. இது போன்று பரிந்துரைக்கப்படும் 10 இல் 9 பேருக்கும் மேலாக புற்றுநோயால் கண்டறியப்பட மாட்டார்கள், இருப்பினும், சிகிச்சை தேவைப்படும் சூழலை முன்கூட்டியே கண்டறிவது அத்தியாவசியம்.

உங்கள் அப்பாயிந்மென்ட் நேரத்தை உறுதிபடுத்த அடுத்த சில நாட்களில் மருத்துவமனையில் இருந்து தகவல் வரும். 10 நாட்களுக்குள் தகவல் ஏதும் உங்களுக்குக் கிடைக்கவில்லை என்றால், இந்தக் கடிதத்தில் உள்ள தொலைபேசி எண்ணில் உங்கள் GP இன் செயலாளரைத் தொடர்பு கொள்ளவும். இந்த அப்பாயிந்மென்ட்டில் கலந்துகொள்வதற்கான அனைத்து முயற்சிகளையும் நீங்கள் மேற்கொள்வது மிகவும் முக்கியம்.

உங்களுக்கு அறிகுறிகளை எது உண்டாக்குகிறது என்பதை புரிந்துகொள்வதற்காக சிறப்பு நிபுணருக்கு உதவக்கூடிய சில பரிசோதனைகள் மருத்துவமனையில் உங்களுக்குத் தேவைப்படலாம். இந்த பரிசோதனைகள் இவைகளாக இருக்கலாம்:

- இரத்த பரிசோதனைகள்
- எக்ஸ் கதிர்கள்
- ஸ்கேன்கள் (CT/MRI)
- கேமரா பரிசோதனைகள்

உங்களுக்கு ஸ்கேன்அல்லது கேமரா பரிசோதனை தேவைப்பட்டால் உங்களுக்கு முன்கூட்டியே சொல்லப்படும், எனவே தயவு செய்து உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும். முடிவுகள் அதே நாளில் உங்களுக்கு வழங்கப்படலாம். ஸ்பெஷலிச்ட் கூடுதல் தகவல்களை வழங்கலாம் மற்றும் அடுத்து மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை வழங்கலாம்.

விருப்பப்பட்டால், உங்களுடன் ஒரு நண்பர் அல்லது குடும்ப உறுப்பினரை அழைத்து வரலாம். மருத்துவக் குழு உங்களுடன் கலந்துரையாடும் போது உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் இது உதவியாக இருக்கும். உங்கள் பரிந்துரைகள் பற்றி உங்களுக்கு ஏதேனும் கவலைகள் அல்லது கேள்விகள் இருந்தால் தயவு செய்து உங்கள் GP-ஐத் தொடர்பு கொள்ளவும்.

அவசரப் பரிந்துரைகள் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு தயவு செய்து வருகையளிக்கவும்:
http://www.cancerresearchuk.org/cancer-symptoms/what-is-an-urgent-referral

உங்கள் அப்பாயிந்மென்ட்டிற்காக காத்திருக்கையில், உங்கள் இயல்பான செயல்கள்/உடற்பயிற்சியைத் தொடர முயற்சிக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது. மேலும் சிகிச்சை தேவைப்பட்டால், புகைபிடிப்பதை நிறுத்துதல் மற்றும் செயல்பாட்டு நிலைகளை மேம்படுத்துதல் போன்ற உங்களின் உடற்தகுதியை மேம்படுத்துவதே உங்கள் சிகிச்சையின் முக்கிய பகுதியாக இருக்கும்.